**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.02/அ3/2022, நாள். .01.2023**

பொருள் ஆசிரியர் கல்வி – இராணிப்பேட்டை மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் – 2022–2023 – மதிப்பீடு புலம் சார்ந்து மாவட்ட அளவிலான பயிற்சி – ஆசிரியர்கள் பயிற்சியில் பங்கேற்கும் வகையில் பணி விடுவிப்பு செய்ய கோருதல் – சார்பு

பார்வை
1. சென்னை – 6, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.4349/மு3/2022, நாள். 30.12.2022
2. ,இராணிப்பேட்டை மாவட்டம், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் முதல்வரின் கடித ந.க.எண்.576/அ2/2022, நாள். 31.12.2022

•••••

பார்வை 1 மற்றும் 2–ல் காணும் கடிதத்திற்கிணங்க தமிழ்நாடு அரசின் முன்னோடி திட்டங்களில் ஒன்றான மதிப்பீட்டுப் புலம் மூலம் பள்ளி சார் மதிப்பீட்டை (School Based Assessment) முதன்மைப்படுத்தும் நோக்கில் உயர் தொழில் நுட்ப ஆய்வகங்கள் (Hig Tech Lab) வழியாக இணைய வழி தேர்வுகள் மூலம் மாணவர்களின் கற்றல் அடைவினை மதிப்பிட்டு வருகிறது. இம்மதிப்பீட்டு பணியின் முக்கியத்துவம் செயல்பாடுகள் குறித்து மாவட்ட அளவில் குறிப்பிட்ட அளவிலான ஆசிரியர்களுக்கு மட்டும் மாநில அளவில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களையும் வல்லுனர்களையும் கொண்டு கீழ்கண்ட நாட்களில் பயிற்சி நடைபெற உள்ளது.

| | | |
|---|---|---|
| **நாள்** | **–** | **03.01.2023 முதல் 06.01.2023 வரை** |
| **இடம்** | **–** | **ஸ்ரீ வெங்கடேஸ்வரா பாலிடெக்னிக் கல்லூரி, அடுக்கம்பாறை, வேலூர்.** |
| **நேரம்** | **–** | **காலை 9.30 முதல் மாலை 5.00 மணி வரை** |

இப்பயிற்சியில் கலந்துக்கொள்வதற்கு ஏதுவாக இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள வகுப்பு மற்றும் பாடங்களுக்கு ஏற்றவாறு பயிற்சியில் கலந்து கொள்ளும் ஆசிரியர்களை பணி விடுவிப்பு செய்து அனுப்புமாறு சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு இப்பயிற்சி தகவலை சார்ந்த வட்டாரக் கல்வி அலுவலர் மூலம் தெரிவிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாவட்டக் கல்வி அலுவலருக்கு (தொடக்கக் கல்வி) தெரிவிக்கப்படுகிறது.

**குறிப்பு** –

1. பயிற்சியில் கலந்து கொள்ளும் ஆசிரியர்கள் தாங்கள் சார்ந்த பாடத்திற்கான பாடப் புத்தகங்கள் தமிழ் வழி, ஆங்கில வழி இரண்டும் கண்டிப்பாக பயிற்சிக்கு கொண்டு வருதல் வேண்டும்.
2. பயிற்சியில் கலந்துக்கொள்ளும் ஆசிரியர்களுக்கு பணயப்படி மற்றும் மதிய உணவு வழங்கப்படும்.

மாவட்ட ஒருங்கிணைப்பாளர், சி . அலமேலு SL DIET – 8072747120

சி. குமார் Lec. DIET 9092687925

**இணைப்பு** – வகுப்பு மற்றும் பாட வாரியான ஆசிரியர்களின் பெயர் பட்டியல்

/ஒப்பம்/–
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

**பெறுநர் –**

1. மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி) வேலூர் (நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு)
2. சார்ந்த பள்ளத் தலைமையாசிரியர்கள், வேலூர் மாவட்டம்.